# Mancy

## போட்டித்தேர்வு Guide

## 9-ம் வகுப்பு

# தமிழ்

TN SCERT புதிய பாடத்திட்டம் 2021-2022-ம் கல்வி ஆண்டு
1 ஆம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை
தமிழ், அறிவியல், சமூக அறிவியல், கணிதம், ஆங்கிலம்
பாடங்களை உள்ளடக்கியது.

மான்சி

கொள்குறி வினாவிடை தொகுப்பு




அனைத்து
போட்டித் தேர்வர்களுக்காகவும்,
பள்ளிமாணவர்களுக்காகவும்
தயாரிக்கப்பட்டது.

# முன்னுரை

"யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"

அன்பார்ந்த போட்டித் தேர்வு எழுதும் நண்பர்களுக்கும், பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் ஓர் இனிய செய்தி, மான்சி போட்டித்தேர்வு கைடு அனைத்து போட்டித்தேர்வுகளில்(IAS, TET, TNPSC, NEET, SLET/NET, RLY, POLICE, NMMS/NTSE…..etc) வெற்றி பெற்று மத்திய மாநில அரசு வேலை பெறவும், பள்ளி மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறவும் தேசிய திறனாய்வு தேர்வில் வெற்றி பெற்று அரசின் நலத்திட்ட உதவி பெறவும் துணையாக இருக்கும்.

TNSCERT 2017 – 2019 - ம் ஆண்டுகளில் NEET மற்றும் போட்டி தேர்வுகளில் வெற்றி பெறும் நோக்கில் புதிய பாடத்திட்டங்களை 1 முதல் 12-ம் வகுப்பு வரை பள்ளிப்பாடங்களாக கொண்டு வந்தன.

வண்டுகள் பூக்களில் சுவையான தேனை சேகரிப்பது போல், மான்சி போட்டி தேர்வு கைடு கொள்குறி வினை விடை வடிவில் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

இப்படிக்கு
நூலாசிரியர்.



P. ஆரோக்கிய சாமி

தொடர்புக்கு
மான்சி கைடு,
நெ.226, வளன் நகர்,
வேட்டவலம் – 606754,
திருவண்ணாமலை மாவட்டம்.
செல் : 9080235851 / 6374624036

# பொருளடக்கம்

## ஒன்பதாம் வகுப்பு - முதல் பருவம்

## புதிய பாடத்திட்டம் - 2020

1. திராவிட மொழிக் குடும்பம், 2. தமிழோவியம், 3. தமிழ் விடுதூது, 4. வளரும் செல்வம், 5. தொடர் இலக்கணம், 6. நீரின்றி அமையாது உலகு, 7. பட்டமரம், 8. பெரிய புராணம், 9. புறநானூறு, 10. துணை வினைகள், 11. பழமொழிகள், 12. மறைநீர், 13. ஏறுதழுவுதல், 14. மணிமேகலை, 15. அகழாய்வுகள், 16. இலக்கணம்-வல்லினம் மிகும் இடங்கள், 17. திருக்குறள், 18. எட்டுத்திக்கும் சென்றிடுவீர், 19. ஓ என் சமகால தோழர்களே, 20. உயிர்வகை, 21. விண்ணையும் சாடுவோம்(1.விக்ரம் சாராபாய், 2.ஏ.பி.ஜே. அப்துல்கலாம், 3.வளர்மதி, 4.அருணன் சுப்பையா, 5.மயில்சாமி அண்ணாதுரை), 22. நாக்கின் சுவை.

## இரண்டாம் பருவம்

1. கல்வியில் சிறந்த பெண்கள், 2. குடும்ப விளக்கு, 3. சிறுபஞ்ச மூலம், 4. வீட்டிற்க்கோர் புத்தக சாலை, 5. இலக்கணம் – இடைச்சொல், உரிச்சொல், 6. வணிக வாயில்(1.கிழக்கு கடற்கரை, 2.மேற்கு கடற்கரை, 3.முசிறி, 4. காவிரி பூம்பட்டினம், 5.கொற்கை.), 7. நான் மாடக்கூடல் 8. மதுரைக்காஞ்சி, 9. சந்தை, 10. ஆகுபெயர், 11. சிற்பக்கலை, 12. ராவண காவியம், 13. நாச்சியார் திருமொழி, 14. சாகித்திய அகாடமி விருது பெற்ற தமிழ் சிறுகதை எழுத்தாளர்கள், 15. புணர்ச்சி இலக்கணம்

## மூன்றாம் பருவம்

1. பழந்தமிழர் சமூக வாழ்க்கை, 2. சீவக சிந்தாமணி, 3. முத்தொள்ளாயிரம், 4. இந்திய தேசிய ராணுவத்தில் தமிழர்களின் பங்கு, 5. பொருளிலக்கணம், 6. என் தலைக் கடனே, 7. ஒளியின் அழைப்பு, 8. யசோதா காவியம், 9. மகனுக்கு எழுதிய கடிதம், 10. யாப்பிலக்கணம், 11. அன்பெனும் அறனே, 12. உலகத்தமிழ் மாநாடு, 13. குறுந்தொகை, 14. தாய்மைக்கு வறட்சி இல்லை, 15. அணியிலக்கணம்.

## ஒன்பதாம் வகுப்பு

## புதிய பாடத்திட்டம் (முதல் பருவம்)

### பாடம்:1 திராவிட மொழிக்குடும்பம்:-

1. இந்தியாவில் 1300 க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. இவை,
2. நான்கு மொழிக் குடும்பங்களாக உள்ளன. அவை,
   - 1. இந்தோ – ஆசிய மொழிக் குடும்பம்.
   - 2. திராவிட மொழிக் குடும்பம்.
   - 3. ஆஸ்திரோ ஆசிய மொழிக் குடும்பம்.
   - 4. சீன – திபெத்திய மொழிக்குடும்பம்.
3. இந்தியா - மொழிகளின் காட்சி சாலை – அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.
4. திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர். – குமரிலப்பட்டர்.

- தமிழ் சொல்லிலிருந்து திராவிடா பிறந்தது.
- தமிழ் – தமிழா – தமிலா – டிரமிளா – ட்ரமிலா – திரவிடா – திராவிடா-(ஹெராஸ் பாதிரியார் கூற்று)

5. திராவிட மொழிகள் (அ) தென்னிந்திய மொழிகள்.

- 1. தமிழ், 2. தெலுங்கு, 3. கன்னடம், 4. மலையாளம்,- பிரான்சிஸ் எல்லிஸ் கூற்று.

6. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் – கால்டுவெல் – 1856.
7. திராவிட மொழிக்கும் சமஸ்கிருத மொழிக்கும் தொடர்புடையவை.
8. தென் திராவிட மொழிகள் – தமிழ், கன்னடம், மலையாளம்,

- நடு திராவிட மொழிகள் – தெலுங்கு,
- வட திராவிட மொழிகள் – பிராகுயி,

9. திராவிட மொழிகள் எண்ணிக்கை மொத்தம் – 28.
10. திராவிட மொழிகளின் பழமையான இலக்கிய இலக்கணங்கள்.

- தமிழ் – தொல்காப்பியம்(இலக்கணம்) – 3-ம் நூற்றாண்டு.
  - சங்க இலக்கியங்கள் – 2-ம் நூற்றாண்டு.
- கன்னடம் – கவிராஜமார்க்கம் – 9-ம் நூற்றாண்டு.
- தெலுங்கு – பாரதம் – 11-ம் நூற்றாண்டு.
- மலையாளம் – ராமசலதம் – 12-ம் நூற்றாண்டு, லீலாதிலகம் – 15-ம் நூற்றாண்டு.

### 2.தமிழோவியம்

11. தமிழோவியம் – ஆசிரியர் – ஈரோடு தமிழன்பன்.

- வணக்கம் வள்ளுவம் – என்ற இவரின் நூலுக்கு 2004-ல் சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது.

12. உலக தாய்மொழி நாள் – பிப்ரவரி 21.

13. தமிழ் ஆட்சிமொழியாக கொண்ட நாடுகள் – இலங்கை, சிங்கப்பூர்.

## 3. தமிழ்விடு தூது

தமிழ்விடு தூது – ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

சிந்து ஒருவகை இசைப்பாடல் – சீவக சிந்தாமணி.

முக்குணம் – தத்துவம், அமைதி, மேன்மை.

மனிதனால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் ஐந்து.
1. வெள்ளை, 2. சிவப்பு, 3. கருப்பு, 4. மஞ்சள், 5. பச்சை.

உணவின் சுவை – ஆறு.

சுவை(செவிக்கு) – ஒன்பது.

நிறங்கள் எண்ணிக்கை – ஐந்து.

தமிழ்விடு தூது – 1930-ல் உ.வே.சா. பதிப்பித்தார். ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

## 4. வளரும் செல்வம்

உலகின் தொன்மையான மொழியாகவும், செவ்வியல் மொழியாகவும் திகழ்வது – கிரேக்க மொழியாகும்.

பா – கிரேகத்தின் தொன்மை காப்பியம் – இலியாத்தில்,

பாய்பியோனா – அப்போலோ கடவுளுக்கு பாடப்படுவது பா.

இளிகியா – கிரேக்கத்தின் துன்பச் சுவையுடைய பாடல்.

## 5.தொடர் இலக்கணம்

பந்து உருண்டது – தன்வினை

பந்தை உருட்டினான் – பிறவினை.

உருட்ட வைத்தான் – காரணவினை.

15. வினையின் பயண் எழுவாயாக இருப்பது – தன்வினை.

வினையின் பயண் பிரிதொன்றை சேர்வது – பிறவினை.

எழுவாய் வினை நிகழ்வதற்கு காரணமாக இருப்பது – காரணவினை.

16. காரண வினைகள் – வி,பி விகுதிகளைக்கொண்டும், செய், பை, பண்ணு போன்ற துணைச்சொற்களை இணைத்தும் உருவாக்கப்படுகின்றன.

17. நட – தன்வினை, நடந்து – பிறவினை, நடந்துச் செய்தார் – காரணவினை.

வா வா வா - அடுக்குத்தொடர்

## 6. நீரின்றி அமையாது உலகு

18. உலக சுற்றுச்சூழல் நாள் – ஜுன் 5.

19. நிலமும் மரமும் – உயிர்கள் நோயின்றி வாழ வேண்டும் என்பதற்காக வளர்கின்றன. – மாங்குடி மருதனார்.

20. கல்லணை – கரிகாலன் – தண்ணீரில் கரையாத ஒட்டும் களிமண்ணால் கட்டப்பட்டது.

21. கண்மாய் – ஏரி (பாண்டியர் பகுதியில்)

- ஊருணி – பருகுநீர் (குடிக்கும் நீர்)

22. கல்லணை – நீளம் – (1080) அடி.

- அகலம் – (40 – 60) அடி
- உயரம் – (15 – 18) அடி

**23.** இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை – ஆர்தர் காட்டன் ஆங்கிலப் பொறியாளர்.
1829-ல் காவிரிப் பாசனப் பகுதியின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.
கல்லணைக்கு கிராண்ட் அணைக்கட் என்ற பெயரை சூட்டினார் ஆர்தர் காட்டன்.
1873-ல் கோதாவரி ஆற்றின் குறுக்கே **தௌலீஸ்வரம்** அணையைக் கட்டினார். (கல்லணையின் கட்டுமான உத்தியை கொண்டு கட்டினார்)

திருமஞ்சனம் ஆடல் – தெய்வச்சிலைகளை குளிக்க வைத்தல்.

நிலத்தடி நீர் பற்றாக்குறை நாடுகள் – 1. அமெரிக்கா, 2. இந்தியா, 3. பாகிஸ்தான், 4. சீனா.

ராஜஸ்தானில் 700 அடியிலும் நீர் இல்லை.

முல்லை பெரியாறு அணையைக்கட்டியவர் – ஜான் பென்னிகுவிக்.

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் பாசனம் பெறுகின்றன.

## தமிழ்நாடு நீர்நிலை பெயர்கள்

அகழி – கோட்டையின் புறத்தே அகழ்ந்தமைக்கப்பட்ட நீர் அரண்.

ஆழி கிணறு – கடலருகே கட்டிய கிணறு.

இலஞ்சி – பல வகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம்.

உறைகிணறு – மணற்பாங்கான இடத்தில்

கண்மாய் – பாண்டிய மண்டலத்தில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர்.

குண்டம் – சிறிய குளிக்கும் நீர்நிலை

குண்டு – சிறு குளம்.

கூவல் – உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை.

கேணி – அகலமும் ஆழமும் உள்ள பெருங்கிணறு.

சிறை – தேக்கப்பட்ட பெரிய நீர்நிலை.

பனற்குளம் – மழை நீரை மட்டும் கொண்டுள்ள குளிக்கும் நீர்நிலை.

பூட்டைக் கிணறு – கமலை நீர் பாய்ச்சும் அமைப்புள்ள கிணறு.

## <u>7. பட்டமரம் – ஆசிரியர் – கவிஞர் தமிழ் ஒளி</u>

கந்தம் – மணம், மிசை – மேல்.

கவிஞர் தமிழ் ஒளி – (1924 - 1965), புதுவையில் பிறப்பு.
பாரதியார் வழித்தோன்றல், பாரதிதாசனின் மாணவர்.

## 8. <u>பெரிய புராணம்</u>

மா – வண்டு, மது – தேன், வாவி – பொய்கை, கழை – கரும்பு, கா – சோலை, கோடு – குளக்கரை.

திருத்தொண்டத்தொகை – சுந்தர்.

திருந்தொண்டர் திருவந்தாதி – நம்பியாண்டார் நம்பி

பெரிய புராணம் – சேக்கிழார்.(மேலேயுள்ள இரு நூல்களைக் கொண்டு எழுதப்பட்டது).

பெரியபுராணம் வேறுபெயர் – திருத்தொண்டர் புராணம்.

சேக்கிழார் – 12-ம் நூற்றாண்டு.

இரண்டாம் குலோத்துங்கன் அவையின் முதன்மை அமைச்சராக செயல்பட்டார்.
சேக்கிழாரை – பக்திச்சுவை நனி சொட்ட சொட்ட பாடிய கவி வளவ என்று – மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகிறார்.

## 9.<u>புறநானூறு</u>

நீர் நிலைகளை உயிராக்குபவர்கள் – உயிரை உருவாக்குபவர்கள் – நம் முன்னோர்கள்.
உணவால் ஆனது உடல்
நீரால் ஆனது உணவு
உடலும் உயிரும் போல நிலமும் நீரும்.
தாட்கு – முயற்சி

தண்ணீர் – கந்தர்வன்

கந்தர்வன் – இயர்பெயர் – நாகலிங்கம் ராமநாதபுரம் மாவட்டம்.

## 10. துணை வினைகள்(இலக்கணம்)

வினைச்சொல் – தன்வினை – படி(பகாபதம்) பிரிக்க முடியாது.

- கூட்டுவினை - அசைப்படு(பகுபதம்) பிரிக்கலாம்.

கூட்டுவினை – மூன்று வகைப்படும்.

- பெயர் +வினை - தந்தி+அடி
- வினை+வனை - கண்டு+பிடி
- இடை+வினை - முன்+ஏறு

தமிழில் 40 துணைவினைகள் உள்ளன. பெரும்பாலானவை முதல் வினையாக செயல்படுகிறது.

இருவகை வினைகள் – யார், இரு, பை, கொள், போ,வா, முடி, விடு, தள்ளு.

## 11. பழமொழிகள்

1. நெல்லுக்கு பாய்கிற தண்ணீர் புல்லுக்கு பாய்வது போல.
2. தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.
3. மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.
4. கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| அழகின் சிரிப்பு | பாவேந்தர் பாரதிதாசன் |
| தண்ணீர் தண்ணீர் | கோமல் சுவாமிநாதன் |
| தண்ணீர் தேசம் | வைரமுத்து |
| வாய்க்கால் மீன்கள் | வெ.இறையன்பு. |
| மழைக்காலமும் குயிலோசையும் | மா.கிருஷ்ணன் |

## 12. மறைநீர் (Virtual Water)

மறைநீர் – உணவுப்பொருளின் உற்பத்திக்கு பயன்படும் நீர்.(தொழிற்சாலையும்)

| ஒரு கிலோகிராம் | லிட்டர் நீர் |
|---|---|
| ஆப்பிள் | 822 லிட்டர் தண்ணீர் தேவை |
| சர்க்கரை | 1780 லிட்டர் |
| அரிசி | 2500 லிட்டர் |
| காப்பிகொட்டை | 18,900 லிட்டர் |

## 13.ஏறு தழுவுதல்

மாடுகள் – வீரத்திற்கும், விளைச்சலுக்கும், செழிப்பிற்கும், செல்வத்திற்கும் அடையளமானவை.

சங்கஇலக்கியம் கலித்தொகையில் – ஏறுதழுவுதல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

- பள்ளு இலக்கியத்தில் குறிப்பிடப்படுகிறது.
- சேலம் – சங்கன் நடுக்கல்.
- தேனி – மயிலாடும் பாறை
- கரிக்கையூர்(நீலகிரி மாவட்டம்) – பாறை ஓவியம்

காளைப்போர் செய்திகள்

- பெனி – ஹாசன் சித்திரம் – எகிப்து
- கினோசஸ் அரண்மனை சித்திரம் – கிரீட் தீவு.

சிந்துவெளி மக்கள் – காளையை தெய்வமாக வணங்கினர்.

சிந்துவெளி – மாடு தழுவும் கல் முத்திரை – ஐராவதம் மகாதேவன் தெரிவித்தார்.

ஜெல்லிக்கட்டு – மாட்டின் கழுத்தில் கட்டப்படும் வளையம் – சல்லி.

புளியங்கொம்பினால் செய்யப்படும் வளையம்.

ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு – காளைச்சண்டை.

தமிழர்களின் பண்பாட்டு திருவிழா – ஜல்லிக்கட்டு.

இரண்டாயிரம் ஆண்டுகள் தொன்மையுடையது.

## 14. மணிமேகலை

இந்திர விழா – புகார் நகரின் சிறப்பான விழா.

குழிஇ – ஒன்று கூடி தோம் – குற்றம் கோட்டி – மன்றம், பொலம் – பொன், வேதிகை – திண்ணை, தாமம் – மாலை, வசி – மழை, செற்றம் – சினம், கலாம் – போர்.

ஐம்பெருங்குழு, எண்பேராயம் – அரசரின் அமைச்சர் குழுக்கள்.

இந்திர விழா – 28 நாட்கள் நடைபெறும்.

பசியும், நோயும், பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாக இந்திரவிழாவில் முரசறைவோனின் அறிவிப்பு.

சாரணர் – ஒற்றர்.

இரட்டைக்காப்பியங்கள் – சிலப்பதிகாரம், மணிமேகலை.

மணிமேகலை – ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. பௌத்தம் தொடர்புடையது. முப்பது காதைகளையுடையது.

மணிமேகலையின் ஆசிரியர் – கூலவணிகன் சீத்தலை சாத்தனார்.

கூல – தானியம், சீத்தலை - ஊர்(திருச்சி), சாத்தன் – இயற்பெயர்.

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் இவரின் சமகாலத்தவர்.

## 15.அகழாய்வுகள்(பட்டிமன்றம்)

அகழாய்வுப்பொருட்கள் – காலத்தையும், வரலாற்றையும் உணர்த்துகின்றன.

கீழடி(மதுரை அருகே) – அகழாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அறிவை விரிவுசெய் – பாவேந்தர் பாரதிதாசன்

1863–ம் ஆண்டு – இராபர்ட் புரூஸ்புட்(தொல்லியல் அறிஞர்) பல்லாவரம்(சென்னை) செம்மண் மேட்டுப்பகுதியில் – எலும்புகளையும், கற்கருவிகளையும் கண்டுபிடித்தார்.

இக்கருவிகள் தான் இந்தியாவின் கண்டுபிடிக்கப்பட்ட முதல் கல்லாயுதம் ஆகும்.

இதற்கு முன்பே ரோமானியரின் பழங்காசுகளை கோவையில் கண்டெடுக்கப்பட்டது.

அரிக்கமேடு(பாண்டிச்சேரி அருகில்) அகழாய்வில் ரோமானியரின் மட்பாண்டங்கள் கிடைத்தன.

1914-ம் ஆண்டு – ஆதிச்சநல்லூரில் அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

நன்னூலை இயற்றியவர் – பவனந்தி முனிவர்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல் கால வகையினானே.

அகழாய்வுப்பணி – 1863-ல் ஆரம்பிக்கப்பட்டது(பல்லாவரம்)

அறிவியல் இரண்டு வகைப்படும். 1. வணிக அறிவியல், 2. மக்கள் அறிவியல்.

## <u>16. இலக்கணம் – வல்லினம் மிகும் இடங்கள்</u>

வல்லெழுத்துக்கள் க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வந்து நிலைமொழியுடன் புணர்கையில் அவற்றின் மெய்யெழுத்துக்கள் தோன்றிப் புணரும்.

.எ.கா. வாணன் வேலை<u>த்</u> கொடுத்தான்

விகாரப்புணர்ச்சி மூன்று வகைப்படும், அவை.

1. தோன்றல், 2. திரிதல், 3. கெடுதல்.

எ.கா. அ<u>ச்</u>சட்டை, கதவை<u>த்</u>திற, என<u>க்</u> கேட்டார்.

நாட்டுப்புற தகவலாளர் – வேலம்மாள்

பெரம்பலூரில் – டைனசோர் முட்டை கிடைத்துள்ளன. முன்பு கடல்பகுதியாக இருந்துள்ளன.

### <u>காங்கேயம் மாடுகள்</u>

- தமிழக மாட்டினங்களின் தாய் இனம் – காங்கேயம் மாடுகள்
- பிறக்கும் போது சிவப்பு நிறம், ஆறு மாதம் பின்னர் சாம்பல் நிறத்திற்கு மாறும்.

- பசுக்கள் சாம்பல் மற்றும் வெள்ளை நிறத்தில் இருக்கும்.
- ஏறு தழுவுதல், ஏர் உழுவதற்கும், வண்டி இழுப்பதற்கும் காங்கேயம் காளைகள் பயன்படுகின்றன.
- கேரளம், கர்நாடகம், ஆந்திரம் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்தும் வாங்கப்படுகின்றன.
- இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

## 17. திருக்குறள்

திருக்குறளின் வேறு பெயர்கள்

1. முப்பால், 2. உலகப் பொதுமறை, 3. பொய்யாமொழி, 4. வாயுறை வாழ்த்து, 5. தெய்வநூல், 6. தமிழ்மறை, 7. முதுமொழி, 8. பொருளுறை போன்ற பல பெயர்களை பெற்றுள்ளது.

திருக்குறளுக்கு முக்காலத்தில் உரை எழுதியவர்கள் பதின்மரால்(பத்து) எழுதப்பட்டது.

திருக்குறளுக்கு **பரிமேலழகர்** உரையே சிறந்தது.

திருக்குறள் – பதிணென்கீழ்க்கணக்கு நூல்களூல் ஒன்றாகும்.

திருவள்ளுவரின் வேறு பெயர்கள்

1. நாயனார், 2. தேவர், 3. முதற்பாவலர், 4. தெய்வப்புலவர், 5. நான்முகனார், 6. மாதானுபங்கி, 7. செந்நாப்போதர், 8. பெருநாவலர்.

திருக்குறள் பற்றிய செய்திகள்

1. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு – 1812.
2. திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது.
3. திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் – அனிச்சம், குவளை.
4. திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் – நெருஞ்சிப்பழம்
5. திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை – குன்றி மணி.
6. திருக்குறளில் **இரண்டு முறை** வரும் ஒரே அதிகாரம் – **குறிப்பறிதல்**
7. திருக்குறளில் இடம்பெறும் இரண்டு மரங்கள் – பனை, மூங்கில்.
8. முதலில் அச்சிட்டவர் – தஞ்சை ஞானப்பிரகாசர்.
9. முதலில் உரை எழுதியவர் – மணக்குடவர்.
10. ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் – ஜி.யு. போப்.
11. திருக்குறளில் **கோடி** என்ற சொல் ஏழு இடங்களில் இடம்பெற்றுள்ளது.
12. ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.
13. திருக்குறள் நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது.

Hero Stone - நடுக்கல்

## 18. எட்டுத்திக்கும் சென்றிடுவீர்.

மின்னணு இயந்திரங்கள் – இணைய இணைப்பு இல்லாதவை(கட்டண சீட்டு)

Xerox – ஒளிப்படி இயந்திரம்

Xerox - 1938-ல் நியூயார்க் காப்புரிமை சட்ட வல்லுநர் – செஸ்டர் கார்ல்சன் – கந்தகம் தடவிய துத்தநாக தட்டைக்கொண்டு உலகின் முதல் ஒளிப்படியை (Xerox ) எடுத்தார். 1938-ல்.

1959-ல் (Xerox mechine) ஒளி நகல் கருவியை செஸ்டர் கார்ல்சன் அறிமுகம் செய்தார்.

Xerox mechine – கிரேக்க மொழியில் சீரோகிராம்பி எனப்படும்.

Fax – தொலை நகல் இயந்திரம்.

1846-ல் ஸ்காட்லாந்து, அலெக்ஸாண்ட் பெயின் அச்சிடுதலை கண்டுபிடித்தார்.

பான்டெலிலிகிராஃப் – தொலை நகல் – ஜியோவான்னி காசில்லி(இத்தாலி)

1865-ல் பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்துக்கு தொலை நகல் சேவை தொடங்கப்பட்டது.

1985-ல் அமெரிக்காவின் – ஹாங்க் மாக்னஸ்கி கணினி மூலம் தொலை நகல்(Xerox ) இயந்திரம் கண்டுபிடித்து – காமா ஃபேக்ஸ் என்று பெயரிட்டு விற்பனைக்கு கொண்டுவந்தார்.

தானியங்கி பண இயந்திரம் (ATM) 1967 ஜூன் 27-ல் இங்கிலாந்தின் ஜான் ஷெப்பர்டு பாரன் – காசோலை மூலம், இயக்கப்பட்டது.(சாக்லேட்டை வெளித்தள்ளும் இயந்திரம் அடிப்படையில்)

ATM Card – கட்டணம் செலுத்தும் கருவி, விற்பனை கருவி.

Password – கடவுசொல், Clips – சில்லு.

1962-ல் ஆட்ரியன் ஆஷ்பீல்டு அவர்கள் Password, ATM Card இவற்றிற்கு காப்புரிமை பெற்றிருந்தார்.

தமிழ்நாடு நியாய விலைக்கடையில் – குடும்ப அட்டைகள் - திறன் அட்டை Smart cord எனப்படும்.

ஆளறிசோதனைக்கருவி – Biometric Device(ஆதார் இந்திரம்)

இங்கிலாந்தின் மைக்கேல் ஆல்ட்ரிக் – 1979-ல் இணைய வணிகத்தை கண்டுபிடித்தார்.

1989-ல் அமெரிகாவில் இணைய வழி மளிகைக்கடை தொடங்கப்பட்டது.

1990-ல் www.server – ஐ (வையக விரிவு வலை) வழங்கி – பெர்னெஸ்லீ உருவாக்கினார்.

1991-ல் இணையம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்தது.

IRCTC – இணையவழிப் பதிவு(Indian Rly) 2002-ல் அறிமுகம்.

மாணவர்களின் போட்டித்தேர்வு(கல்வி உதவித்தொகை) 10 –ம் வகுப்பு மாணவர்களுக்கு – தேசிய திறனாய்வுத்தேர்வு NTSE (National Talent Search Exam) நடத்தப்படுகிறது.

8-ம் வகுப்பு மாணவர்களுக்கு தேசிய திறனாய்வு மற்றும் கல்வி உதவித்தொகைத் தேர்வு(National Means – cum – Merit Scholarship Scheme Exam)

9-ம் வகுப்பு மாணவர்களுக்கு ஊரக திறனாய்வுத்தேர்வு – (TRUST – Tamil Nadu Rural Students Talent Search Examination).(கிராமப்புற பள்ளிகளில் படிக்கும் 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும்).

1. Pendrive - விரலி, 2. Document – கோப்புகள், 3. Folder – உறைகளில்

## 19. ஓ என் சமகாலத் தோழர்களே – ஆசிரியர் – வைரமுத்து.

கவிஞர் வைரமுத்து தேனி மாவட்டம் – மெட்டூர் என்னும் ஊரில் பிறந்தார்.

பத்மபூஷன் விருதை பெற்றவர்.

2003-ல் சாகித்ய அகாடமி விருதை(கள்ளிக்காட்டு இதிகாசத்திற்கு) பெற்றார்.

இந்தியைவின் சிறந்த பாடலாசிரியர் விருதை ஏழு முறை பெற்றுள்ளார்.

மாநில அரசின் விருதை நான்கு முறை பெற்றுள்ளார்.

## 20. உயிர் வகை

ஆறாம் அறிவு – மனதனால் அறியப்படுவது.

ஓரறிவு – தொடு உணர்வு – புல், மரம்

ஈரறிவு – சுவைத்தல்(நாக்கு) – சிப்பி, நத்தை.

மூவறிவு – நுகர்தல்(மூக்கு) – கரையான், எறும்பு.

நான்கறிவு – காணல்(கண்) – நண்டு, தும்பி.

ஐந்தறிவு – கேட்டல்(காது,செவி) – பறவை, விலங்கு.

ஆறறிவு – பகுத்தறிதல்(மனம்) – மனிதன்.

**தொல்காப்பியம்**

தமிழின் முதல் இலக்கண நூல் – தொல்காப்பியம்

ஆசிரியர் – தொல்காப்பியர்.

எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது.

எழுத்து, சொல் – இலக்கணம்.

பொருள் – வாழ்வியல் நெறி, இலக்கிய கோட்பாடு.

## 21. விண்ணையும் சாடுவோம்

### தமிழகத்தின் அறிவியல் அறிஞர்கள்

1. டாக்டர். ஏ.பி.ஜே.அபதுல் கலாம், 2. மயில்சாமி அண்ணாதுரை, 3. வளர்மதி, 4. சிவன்.

சிவன் – ISRO – வின் 9-வது தலைவர்.

(ISRO) – வின் தலைவர்களில் முதல் தமிழன்.

2015-ல் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநராக இருந்து ISRO – வின் தலைவராகப் பொறுப்பேற்றார்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்(ISRO – Indian Space Research Organization).

சிவன்( ISRO) அவர்கள் வல்லங்குமாரவினை கிராமத்தில்(நாகர்கோயில்அருகில்) பிறந்தார்.

(MIT) – வானூர்த்திப் பொறியியல் படிப்பு.

1983- ல் (PSLV) (Polar Satellite Launch Vehicle) – திட்டத்தில் பணிபுரிந்தார்.

சித்தாரா செயலி – செயற்கைக்கோள் ஏவு ஊர்தி பற்றிய முழு விவரங்களை மின்னிலக்க முறையில் சேகரிக்கும் கருவி – (சிவன் கண்டுபிடித்தது)

SITARA – Software for Integrated Trajectory Analysis with Real time Application – by Sivan.

இதை பயன்படுத்தித் தான் பி.எஸ்.எல்.வி ஏவப்பட்டது.

சிவன் கண்டுபிடித்த சித்தாரா செயலியை பயன்படுத்தி தான் அனைத்து செயற்கைக்கோள் ஏவு ஊர்திகளும் விண்ணில் ஏவப்படுகின்றன.

### I.விக்ரம் சாராபாய்

இந்திய விண்வெளி திட்டத்தின் தந்தை – விக்ரம் சாராபாய்.

ஆரியபட்டா என்ற முதல் செயற்கைக்கோள் ஏவுவதற்க்கு காரணமானவர்.

செயற்கைக்கோள் உதவியுடன் தொலைக்காட்சி வழியாக 24,000 கிராமங்களில் 50 இலட்சம் மக்களுக்கு கல்வியை பரப்பி உதவினார்.

இவரின் பெயரால் விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் திருவணந்தபுரத்தில் செயல்பட்டு வருகிறது.

விக்ரம் சாராபாய் முயற்சியால் தான் இஸ்ரோ (ISRO) தொடங்கப்பட்டது.

இங்கு வானூர்தியியல்( Aeronautics), வான்பயண மின்னணுவியல்(Avionics), கூட்டமைப்பொருள்கள் (Composites), கணினி – தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் ஆராய்ச்சிகளும் வடிவமைப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

1957-ல் முதன்முதலில் ரஷ்யா ஸ்புட்னிக் என்ற செயற்கைக்கோள் ஏவின.

## II.டாக்டர். ஏ.பி.ஜே.அபதுல் கலாம்.

இந்தியாவின் 11 வது குடியரசு தலைவர் - டாக்டர். ஏ.பி.ஜே.அபதுல் கலாம்.
இந்திய ஏவுகணை நாயகன்.
பாரத ரத்னா விருது பெற்றவர்.
செயற்கைக்கோளைக் கொண்டு நிலத்தடி நீரின் அளவு, கடல் பகுதிகளில் மீன்கள் அதிகம் இருக்கும் இடங்களை துல்லியமாக காண முடியும்.
இதுவரை இந்தியாவுக்காக 45 செயற்கைக் கோள்கள்(2017) செலுத்தப்பட்டுள்ளன.
நேவிக்(NAVIC) என்ற செயற்கைக் கோளை கடல் பயணத்திற்கு உருவாக்கப்பட்டன.

## III. வளர்மதி

- பிறப்பு – அறியலூர்.
- 2015-ல் தமிழ்நாடு அரசின் அப்துல் கலாம் விருது பெற்ற முதல் அறிவியல் அறிஞர்.
- 1984 முதல்(ISRO) –ல் பணியாற்றி வருகிறார்.
- 2012 –ல் **RISAT – 1** முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் திட்டத்தின் இயக்குநராக பணியாற்றினார்.
- இந்தியாவின் செயற்கைக்கோள் திட்ட இயக்குநராக பணியாற்றிய இரண்டாவது பெண் அறிவியல் அறிஞர் – வளர்மதி ஆவார்.
- விண்வெளித்துறையில் மூன்று வகையான தொழில்நுட்பங்கள் உள்ளன.

1. செயற்கைக்கோளை ஏவும் தொழில்நுட்பம்.
2. செயற்கைக்கோளை ஏற்றி செல்லும் ஏவு ஊர்தி.
3. செயற்கைக்கோள் தரும் செய்திகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்.

சந்திராயன் – 1 நிலவின் புறவெளியை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது.

சந்திராயன் – 2 ரோபோட்டிங் தொழில்நுட்பத்துடன் நிலவில் இறங்கி 14 நாட்கள் பயணிக்கும்.

## IV. அருணன் சுப்பையா

2013 – ல் மங்கல்யான் செயற்கைகோளை உருவாக்கி செவ்வாய் சுற்றுக்கலன் திட்டத்தின் திட்ட இயக்குநர்.
கோதைசேரி (ஏர்வாடி அருகில்) திருநெல்வேலி.
1984-ல் திருவனந்தபுரம் விகரம் சாராபாய் விண்வெளி மையத்தில் பணியில் சேர்ந்து, தற்போது பெங்களூர் இஸ்ரோவில் பணிபுரிகிறார்.

## V.மயில்சாமி அண்ணாதுரை

- இளைய கலாம் என அழைக்கப்படுகிறார்.
- கோதவாடி சிற்றூர், பொள்ளாச்சி தாலுக்கா, கோவை மாவட்டம். பிறப்பு.
- 11-ம் வகுப்பு வரை தமிழ்வழி அரசுப் பள்ளியில் பயின்றார்.
- ஐந்து முனைவர் (PH.D) பட்டம் பெற்றுள்ளார்.
- 1982-லிருந்து இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றிவருகிறார். சந்திராயன் திட்டத்தின் திட்ட இயக்குநர்.
- இவர் எழுதிய நூல் – நிலா.
- ISRO – வின் மூன்று வகையான திட்டங்கள், 3 ஆண்டுகள், 7 ஆண்டுகள், 15 ஆண்டுகள் திட்டம்.

1. அக்னி சிறகுகள் – அப்துல் கலாம்
2. மின்மினி – ஆயிஷா நடராஜன்.
3. ஏன், எதற்கு, எப்படி – சிஜாதா.

## 22. நாக்கின் சுவை

தித்திப்பு – நுனி நாக்கு

உப்பு - பரவலாக

கசப்பு - உள்நாக்கு

புளிப்பு - நாக்கின் வலது இடது ஓரம்.

56. நாக்கில் 9,000 சுவை அரும்புகள் உண்டு.

57. மூக்கிற்கு மொத்தம் 7 வாசனைகள் உண்டு.

58. - ஏவு ஊர்த்தி – **Launch Vehicle**

- ஏவு கணை - **Missile**
- கடல் மைல் – **Nautical mile**
- காணொலிக்கூட்டம் – **Video Conference**
- பதிவிறக்கம் - **Download.**

**PNR – Passenger Name Record** – பயணியர் பெயர் பதிவு.

மின்னணு இயந்திரங்கள் - **Electronic Devices.**

## ஒன்பதாம் வகுப்பு

## புதிய பாடத்திட்டம்- 2 பருவம்.

### 1. கல்வியில் சிறந்த பெண்கள்.

1. சங்க காலப் பெண்பாற் புலவர்கள்
1. ஔவையார், 2. ஒக்கூர் மாசாத்தியார்.
3. ஆதிமந்தியார், 4. வெண்ணிக்குயத்தியார்
5. பொன்முடியார், 6. அள்ளூர் நன்முல்லையார்
7. நக்கண்ணையார், 8. காக்கைப் பாடினியார்
9. வெள்ளி வீதியார், 10. காவற்பெண்டு, 11. நப்பசையார்.

2. மணிமேகலை – மாதவி மகள், சமண பௌத்தம் வளர்ந்த காலத்தில் கல்வி கற்ற பெண்.

3. காரைக்கால் அம்மையார், ஆண்டாள் – பக்தி இயக்க காலத்தில் கல்வி கற்ற பெண்கள்.

4. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் – முத்துலெட்சுமி.

5. **முத்துலட்சுமி 1886-1968**

1. அடையாரில் 1930-ல் – அவ்வை இல்லம்.
2. அடையாரில் புற்றுநோய் மருத்துவமனை – 1952.
3. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்.
4. மாதர் சங்கத் தலைவி.
5. சென்னை மாநகராட்சி முதல் துணைமேயர்.
6. சட்ட மேலவையின் முதல் பெண்மணி.
7. தேவதாசி ஒழிப்பு, இருதார தடைச்சட்டம், பெண்களுக்கு சொத்துரிமை, குழந்தை திருமண தடைச்சட்டம்.
8. 1882. ல் ஹண்டர் கல்வி குழு – முதன்முதலில் பெண் கல்விக்கு பரிந்துரை செய்தது.
9. மராத்தியத்தில் – ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே, - பெண்கள் பள்ளியை தொடங்கினர்.
10. கைலாஷ் சத்யார்த்தி – 2014-ல் நோபல் பரிசு பெற்றவர்.

இந்தியாவில் குழந்தையைப் பாதுகாப்போம் என்ற அமைப்பை நிறுவி – 80 ஆயிரம் குழந்தைகள் கல்வி பெற உதவினர்.

11. மலாலா – பாகிஸ்தானில் பெண்கல்விக்காக போராடி 1997-ல் 12-ம் வயதில் நோபல் பரிசு பெற்றவர்.

சாவித்திரிபாய் பூலே – 1831 – 1897 நாட்டின் முதல் பெண் ஆசிரியர். 1848-ல் பெண்கள் பள்ளியின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

12. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் 1883 – 1962.

- சமூக சீர்சிருத்தவாதி, எழுத்தாளர், தேவதாசிமுறையை ஒழித்தல், திருமண உதவித்திட்டம் இவரின் பெயரால் வழங்கப்படுகிறது.

13. பண்டித் ரமாபாய் 1858 – 1922

சமூக தன்னார்வலர், தடையைமீறி கல்வி கற்று பெண்கள் உயர்வுக்கு துணை நின்றார்.

14. ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் 1870 – 1960. மருத்துவர்.

வேலூரில் இலவச மருத்துவம் அளித்தார்.

15. நீலாம்பிகை அம்மையார் 1903 – 1943.

மறைமலையடிகளின் மகள், தனித்தமிழ் கட்டுரை படைப்பு.

16. கோத்தாரிக் கல்விக் குழு- 1964, மகளிர் கல்வியை வலியுறுத்தியது.

17. சாரதா சட்டம் – 1929-ல் குழந்தை திருமணம் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

18. ஈ.த.ராஜேஸ்வரி அம்மையார். 1906 – 1955.

இலக்கியம், அறிவியலில் சிறந்தவர். இராணிமேரி கல்லூரி அறிவியல் பேராசிரியர்.

சூரியன், பரமாணும், புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

## 2. குடும்ப விளக்கு

குடும்ப விளக்கு – ஆசிரியர் – பாரதிதாசன்,

பாரதிதாசனின் – பிசிராந்தையார் நாடக நூலுக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் – பாரதியார்.

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா............. – கவிமணி.

பெண் எனில் பேதை என்ற எண்ணம்
இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்
உருப்படல் என்பது சரிப்படாது....... – பாரதிதாசன்.

## 3. சிறுபஞ்ச மூலம் – ஆசிரியர் காரியாசன்

மூவாது – முதுமை அடையாமல், நறுவ – முளைப்ப, தாவா – கெடாதிருத்தல்.

சிறுபஞ்சமூலம் – பதினென்கீழ்கணக்கு நூல்களுல் ஒன்று.

சிறுபஞ்ச மூலம் – ஐந்து சிறிய வேர்கள், கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி, - உடல்நோயை போக்கும்.

காரியாசன்-மதுரை, காரி–இயற்பெயர்.

வள்ளலார்-10 வயதில் சொற்பொழிவு நிகழ்த்தவும், பாடவும் ஆற்றல் பெற்றார்.
பாரதி-11 வயதில் அரசவையில் கவிதை எழுதி பாரதி என்ற பட்டம் பெற்றார்.
விக்டர் ஹியூகோ.- 15 வயதில் தமது கவிதைகளை பிரெஞ்சு இலக்கிய கழகத்திற்கு எழுதியனுப்பியவர்.

மாவீரன் அலெக்ஸாண்டர் – 16 வயதில் தமது தந்தையின் போர்ப்படையில் தளபதியானவர்.

கலீலியோ – 17-வது வயதில் பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தார்.

ஒரு பாடலில் 3, 6, கருத்துக்கள் கொண்ட அறநூல்கள் பதினென்கீழ்கணக்கு வரிசையில் அமைந்துள்ளன.

பூக்காமலே காய்க்கும் மரம் –

விதைக்காமலே முளைக்கும் விதைகள் –

## 4. <u>வீட்டிற்கோர் புத்தகசாலை</u>

2009-ல் இந்திய அரசு ஐந்து ரூபாய் நாணயத்தில் அண்ணாவின் உருவத்தை வெளியிட்டது.
2010-ல் தமிழக அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

தென்னகத்து பெர்னாட்ஷா – அண்ணா.

1935-ல் அறிஞர் அண்ணா அவர்கள் ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்தார். (கோவிந்தப்ப நாய்க்கன் பள்ளி)

இருமொழி சட்டத்தை உருவாக்கினார்.

ஆசியாவின் பழமையான நூலகம் – தஞ்சை சரஸ்வதி மஹால்.

கன்னிமாரா நூலகம் – எழும்பூர். உலகளவில் தமிழ் நூல்கள் அதிகம் உள்ளன.

இந்தியாவின் முதல் பொது நூலகம் – திருவனந்தபுரம்
கொல்கத்தாவில் 1836-ல் தொடங்கி, 1953-ல் பொதுமக்கள் பயன்பாட்டில் வந்த தேசிய நூலகம் – இந்தியாவின் மிகப்பெரிய நூலகம் இது ஆவணகாப்பக நூலகமாகத் திகழ்கிறது.
உலகின் மிகப்பெரிய நூலகம் – லைப்ரரி ஆப் காங்கிரஸ்(அமெரிக்கா)

தேசிய நூலக நாள் – ஆகஸ்ட் 9.

சீர்காழி ஆர்.அரங்கநாதன் பிறந்த நாள் – ஆகஸ்ட் 9.

## <u>5. இலக்கணம் – இடைச்சொல் – உரிச்சொல்</u>

**<u>இடைச்சொற்கள்</u> –** இன், கு, உடைய, உம், ஐ, வி, கள், ஆனால், தான், போல, உடன் போன்றவை.
இடைச்சொற்க்கள் தனித்து இயங்காது, பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும்.

உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்கள் தற்கால தமிழில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

அன்று – ஒருமை, எ.கா. இது பழம் அன்று.

அல்ல – பன்மை. எ.கா. இவை பழங்கள் அல்ல.

எத்தனை – எண்ணிக்கை. எ.கா. எத்தனை நூல்கள் வேண்டும்.

எத்துணை – அளவு, காலம் குறிக்கும். எ.கா. எத்துணை பெரிய மரம்(அளவு), எத்துணை ஆண்டுகள் பழமையானது(காலம்)

பொருத்துக.

சிறுபஞ்சமூலம் – அற இலக்கியம்

குடும்ப விளக்கு – தற்கால இலக்கியம்

சீவக சிந்தாமணி – காப்பிய இலக்கியம்

குறுந்தொகை – சங்க இலக்கியம்

நா.காமராசரின் கவிதை நூல் – கருப்பு மலர்கள்.

திரைப்படமாக வந்த கோமல் சுவாமிநாதனின் நாடக நூல் – தண்ணீர் தண்ணீர்.

நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வேலின் குறு நாவல் – கிழவனும் கடலும்.

சாகித்ய அகாடமி பரிசு பெற்ற சிற்பியின் கவிதை நூல் – ஏழு கிராமத்து நதி.

எஸ்.ராமகிருஷ்ணனின் சிறார் நாவல் – சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம்.

ஓய்திருக்கலாகாது – கல்விச் சிறுகதைகள் - (தொகுப்பு. அரசி - ஆதிவள்ளியப்பன்)

முதல் ஆசிரியர் – சிங்கிஸ் ஐத் மாத்தவ்.

கல்வியில் நாடகம் – பிரளயன்

மலாலா – கரும்பலகை யுத்தம்.

## 6.வணிக வாயில்

மார்க்கோபோலோவின் பயணக்குறிப்புகள் பிளினி(இத்தாலி) குறிப்புகள், தமிழர் வணிகம் பற்றி கூறுகின்றன.

கொற்கை முத்தின் சிறப்பை அர்ரத்த சாஸ்த்திரம் குறிப்பிடுகிறது.

எகிப்து அரசி – கிளியோபாட்ரா – கொற்கை முத்தை அணிந்ததாக பிளினி குறிப்பிடுகிறார்.

பண்டைய தமிழர்கள் போர், வணிகத்திற்காக துறைமுகத்தை பயன்படுத்தினர்.

துறைமுகங்கள் ஆற்றின் கழிமுகங்களில் அமைந்திருந்தது.

வடவேங்கடம் முதல் கன்னியாகுமரி வரை பண்டைய தமிழக ஆட்சிப் பகுதியாகும்.

**I. தமிழக கிழக்கு கடற்கரை துறைமுகங்கள்**

கொல்லந்துறை, எயிற் பட்டினம், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கை, கொற்கை.

**II. தமிழக மேற்கு கடற்கரை துறைமுகங்கள்**

மங்களூர், நறவு, தொண்டி, மந்தை, முசிறி, வைக்கரை, விழிஞம்.

**III. முசிறி துறைமுகம்** –_சேரர் ஆட்சிப்பகுதி, பேரியாறு(மேற்குத்தொடர்ச்சி மலை) கடலில் கலக்குமிடத்தில் உருவான இயற்கை துறைமுகம்.

வஞ்சி துறைமுகத்தின் அருகில் அமைந்துள்ளது.

மணிமேகலையில் காந்தவூசி பற்றிய செய்தி இருக்கிறது. பழங்காலத்தில் திசை அறிந்த காந்தவூசியைப் பயன்படுத்தினர்.

முசிறி துறைமுகத்தில் யவனர்கள் பொன்னை(தங்கம்) தந்து மிளகை வாங்கினர்.

அரேபிய வணிகர் மிளகை வாங்கி – அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் (நைல் நதி கடலில் கலக்குமிடம்) விற்றனர்.

பந்தர் – கடைவீதி.

முசிறி – அலெக்சாண்டியா ஒப்பந்தம் – கி.பி. 150-ல் முசிறி கிரேக்க வணிகர்களுக்கிடையேயான வணிக ஒப்பந்தம்.

ஒருமுறை சென்ற கப்பலின் வணிக பணமதிப்பீடு – 2,94,84,000 கிராம் வெள்ளியின் எடைக்கு ஈடானது.

**IV. காவிரிப் பூம்பட்டினம்**

காவிரி கடலில் கலக்குமிடம். 1. மருவூர்பாக்கம், பட்டினப்பாக்கம், என இருபிரிவாக இருந்தது.

பொருள்களுக்கு சுங்கத் தீர்வை துறைமுகத்திலேயே வசூலிக்கப்பட்டது. என பட்டினப்பாலை கூறுகிறது.

இராமநாதபுரம் அழகன்குளம் முதல் ரோம் வணிக கப்பல் பயணித்ததை கப்பலின் உருவம் பானையில் வரையப்பட்டன.

யவனர்(ரோம்), சாவதர், வட இந்தியர் காவிரிப் பூம்பட்டினத்தில் வியாபாரம் புரிந்தனர்.

காவிரிப் பூம்பட்டினத்தில் சோழமன்னன் கிள்ளிவளவன் ஆட்சிகாலத்தில் – கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை வாழ்ந்தனர்.

**V. கொற்கை**

தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடம், இயற்கை துறைமுகம்.(பாண்டியர்).

கொற்கை – முத்துக்குளித்தல், சங்குகளும்(வளம்புரி சங்கு)

பாண்டியநாட்டு முத்துக்களை ரோம் நாட்டினர் விரும்பி வாங்கியுள்ளனர்.

பாண்டிய மன்னர்கள் ரோம் மன்னர் அகஸ்டஸ்ஸிற்கு – முத்துக்களை பரிசாக அளித்ததாக அறிஞர் ஸ்டிராபோ குறிப்பிடுகிறார்.

கொற்கை அகழ்வாய்வில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன.

கொற்கை குடாக்கடல் நிலத்தின் உள்ளே 5 கல் தொலைவிற்கு ஊடுருவியிருந்தது.(தூத்துக்குடி)

குதிரைகள் – கடல்வழி

மிளகு(கறி) – உள்நாட்டு தரைவழி.

பொன், மாணிக்க கற்கள் – வடமலையிலிருந்து

சந்தனம், ஆரம் – மேற்கு மலையிலிருந்து.

முத்து – தென் கடலிலிருந்து

பவளம் – கீழ்க்கடலில் விளைந்தவை.

முதல் நூற்றாண்டில் கிரேக்க மாலுமி – ஹிப்பல்ஸ்

முசிறி துறைமுகத்திற்கும், ரோமுக்கும் நேராக கடல் வணிகத்தை கண்டுபிடித்தார்.
அகஸ்டஸ் சீஸர் யவன தமிழர் வணிகத்தை விரிவுபடுத்தினர்.
ரோம் அரசர்களின் உருவ முத்திரையிடப்பட்ட பழைய நாணய புதையல்கள் தமிழ் நாட்டில் கிடைத்துள்ளன.
பாண்டிய மன்னர்கள் குதிரைப்படைக்காக அரேபியாவிலிருந்து கொற்கை(தூத்துக்குடி) துறைமுகத்திற்கு ஆண்டுதோறும் 16,000 குதிரைகள் வந்து இறங்கின.
அஃகசாலை – கொற்கையில் பாண்டிய நாணயங்கள் அச்சிடப்பட்ட தெருவின் பெயர்.
மீன் முத்திரைபொறித்த வெள்ளி நாணயங்கள் இங்கு கிடைத்துள்ளன.

## 7. நான் மாடக்கூடல்

மதுரை – தூங்கா நகரம் எனப்படும், தமிழகத்தின் தொன்மையான நகரம் – மதுரை. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த இடம்.
நான் மாடக்கூடல் எனப்படுவது – மதுரை.

கௌடில்யர் – கி.மு.370, மெகஸ்தனிஸ்(கிரேக்க தூதர்) – கி.மு.350. மதுரையின் சிறப்புகளை கூறியுள்ளன.
நாலுமலை கொண்ட பெருநகரம் – நான்மாடக்கூடம் – மதுரை, ஆனைமலை, நாகமலை, பசுமலை, சமணமலை.
மதுரை – வைகைநதி, மல்லிகை, மீனாட்சிஅம்மன் கோவில், ஏறுதழுவுதல், நாயக்கர் மஹால், தூங்கா நகரம்.
சிந்து – ஓசை நயத்துடன் பாடப்படும் நாட்டுப்புறப் பா வகை – சிலப்பதிகார காலத்திலிருந்து வழக்கில் உள்ளது.
பாரதியார் சிந்து வகையினை அதிகம் பயன்படுத்தினர். சிந்துக்கு தந்தை – பாரதி என போற்றப்படுகிறார்.

## 8. மதுரைக் காஞ்சி

மதுரைக்காஞ்சி – ஆசிரியர் – மாங்குடி மருதனார்.

புரிசை – மதில், அணங்கு – தெய்வம், முந்நீர் – கடல், சுயம் – நீர்நிலை, நியமம் – அங்காடி, பணை – முரசு, புழை – சாளரம், சீல்காற்று – தென்றல், காஞ்சி – நிலையாமை.

மதுரைக்காஞ்சி – பத்துப்பாட்டு நூல்களுல் ஒன்றாகும். 782 அடிகளை உடையது. அவற்றில் 354 அடிகள் மதுரை பற்றியது.

மதுரைக்காஞ்சியின் பாட்டுடைத் தலைவன் – தலையாளங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

மதுரைக்காஞ்சியின் வேறு பெயர் – பெருகுவள மதுரைக்காஞ்சி.

## 9. சந்தை

சந்தை – ஒரே இடத்தில் எல்லா கடைகளும் இருக்கும்.

நாளங்காடி – பகலில் செயல்படும் கடைவீதிகள்.

அல்லங்காடி – இரவில் செயல்படும் கடைவீதிகள்.

மக்கள் நாகரீகம் குறிஞ்சி நிலத்தில் வேரூன்றி, முல்லை நிலத்தில் வளர்ந்து,, மருதம் நிலத்தில் முழுமையடைந்தது.

தாவணி – சந்தை என்று பொருள். எ.கா. மாட்டுத்தாவணி – மாட்டுச்சந்தை (மதுரை).

கிராம சந்தையில் – கூழைக்கூத்தும், பொம்மலாட்டமும் உண்டு.

125 ஆண்டுகாலமாக கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி சந்தை 18 ஏக்கர் பரப்பில் 8,000 கடைகளுடன் இன்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுகிறது.

நான்கு தலைமுறைகளாக கலப்படமில்லாத பொருள்களை வருவாய் நோக்கமின்றி விற்பனை செய்கிறது.

### சந்தைகள்

மணப்பாறை – மாட்டுச்சந்தை

அய்யனார் - ஆட்டுச்சந்தை

ஒட்டன் சத்திரம் – காய்கறி சந்தை

நாகர்கோயில் தோவாளைன்னா – பூச்சந்தை.

ஈரோடு - ஜவுளி சந்தை

காராமணிகுப்பம் – கருவாட்டுச்சந்தை

நாகப்பட்டினம் – மீன்சந்தை.

தமிழகத்தில் – வார சந்தை,மாதச்சந்தை, மாலைநேரச் சந்தைகள், நடைபெறுகின்றன.

கிராம சந்தையில் உற்பத்தியாளர் தான் விற்பனையாளர். நவீன சந்தையில் உற்பத்தி செய்கிறவன் விற்பதில்லை.

## 10. ஆகுபெயர்

ஒன்றின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்கு தொன்றுதொட்டு ஆகிவருவது ஆகுபெயர்.

ஆகுபெயரை தொல்காப்பியர் 7 ஆகவும், நன்னூலார் 15 ஆகவும் வகைப்படுத்துகின்றன.

மளிகைக்கடை – பல சரக்கு கடை, கூலக்கடை – பலவகை தனியங்கள் விற்கும் கடை, கூலம் – தானியங்கள்.

அக்காலத்தில் இசையரங்குகளில் மன்னரை வாழ்த்தியப் பின் உழவரை வாழ்த்தும் வழக்கம் இருந்தது.

மகிழுந்து – கார், பேருந்து – பஸ்

நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம் – முனைவர்.கா.சக்திவேல்.

தரங்கம்பாடி தங்கப்புதையல் – பெ.தூரன்.

இருட்டு எனக்கு பிடிக்கும் – ச.தமிழ்ச்செல்வன்

## 11. சிற்பக்கலை

சிற்பத் தொழில் பொருட்கள் பத்து. அவை, 1. கல், 2. உலோகம், 3. செங்கல், 4. மரம், 5. மண், 6. சுதை, 7. தந்தம், 8. வண்ணம், 9. சருக்கை, 10. மெழுகு.

சுதை – சுண்ணாம்புக்கலவை, பிரதிமை – முழுவடிவம், சருக்கை –

கோவில்களில் – புடைப்புச்சிற்பங்கள். மாமல்லபுரம் சிற்பங்கள் – பல்லவர்கள்

பஞ்ச பாண்டவர் ரதம், பறவைகள், விலங்குகள் சிற்பமாக உள்ளன.

காஞ்சி கைலாசநாதர் கோயில் சுற்றுச்சுவர் முழுவதும் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது(வைகுண்ட பெருமாள் கோயில் சிற்பம்)

பல்லவர் கால சிற்பங்கள் – மாமல்லபுரம், காஞ்சிபுரம்,திருச்சி மலைக்கோட்டை

பாண்டியர் கால சிற்பங்கள் திருமயப் பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம், கழுகுமலை, வெட்டுவான்கோயில்(கோவில்பட்டிக்கு மேற்கே)

### சோழர்கால சிற்பங்கள்

தஞ்சை பெரிய கோயில் – இராசராசன்

கங்கைகொண்ட சோழபுரம் – முதலாம் இராசேந்திர சோழன்.

தாராசுரம் ஐராவதீசுவரர் கோயில் – இரண்டாம் இராசராசன்.

திரிபுவன வீரேசுவரம் கோயில் – இரண்டாம் குலோத்துங்க சோழன்.

தஞ்சை பெரிய கோயிலின் வாயிற்காவலர் சிற்பம் 14 அடி உயரமுடையது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் நவகிரகம், சிங்கமும், கிணறும், ஒரே கல்லில் அமைந்துள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம் - நார்த்தாமலையில் - நடன முத்திரை சிற்பங்கள். கொடும்பளூர்- மூவர் கோவில் சிற்பங்கள்.- இரண்டாம் பராந்தக சோழன்.

குரங்கநாதர்கோயில் – சீனிவாச நல்லூர்(திருச்சி மாவட்டம்) திருவரங்க கோயில் – முகபாவனை.
சோழர் காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என அழைக்கப்படுகிறது.
செப்புத் திருமேனிகள், கடவுள் மனிதரின் உருவங்கள் கலைநுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## விஜயநகர மன்னர் கால சிற்பங்கள்.

உயர்ந்த கோபுரங்கள், குதிரையின் உருவங்கள், ஓசை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் அமைத்தனர்.

**தமிழ்நாட்டின் சிற்ப கல்லூரிகள்.**

தமிழ்நாடு அரசு மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி
கும்பகோணம் அரசு கவின் கல்லூரி.
சுவாமிமலை, கும்பகோணம், மதுரை – உலோக படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன.

**நாயக்கர் கால சிற்பங்கள் –** ஆயிரங்கால் மண்டபங்கள்(மதுரை மீனாட்சி அம்மன் கோயில், இராமேஸ்வரம், திருநெல்வேலி, கிருஷ்ணாபுரம், திண்டுக்கல், கோயம்புத்தூர்)

**பௌத்த சமண சிற்பங்கள் –** அருகக் கடவுள் – சமணர், திருநாதர் குன்று (செஞ்சிக்கு அருகில்) – பாறையில் 24 தீர்த்தங்கரர்கள் உருவங்கள் புடைப்பு சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன.
மதுரை மலைப் பாறையில் – சமண சிற்பங்கள்
பைஞ்சுதை – சிமெண்ட்

## 12. இராவண காவியம்

மைவனம் – மலைநெல், சாந்தம் – சந்தனம்

இராவணகாவியம் ஆசிரியர் – புலவர் குழந்தை

இவர் பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாட்கள் திருக்குறளுக்கு உரை எழுதினார்.
இராவண காவியம் ஐந்து காண்டங்களையும் 3100 பாடல்களையும் கொண்டது.

## 13. நாச்சியார் திருமொழி

140 பாடல்களைக் கொண்டது – ஆசிரியர் – ஆண்டாள்.

ஆண்டாள் திருமால் மீது காதல் கொண்டு பாடியது நாச்சியார் திருமொழி. புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்.
ஆழ்வார்கள் மொத்தம் 12 பேர். அதில் ஆண்டாள் மட்டும் பெண் ஆவார்.

ஆண்டாள் – சூடிக்கொடுத்த சுடர்கொடி எனப்படுகிறார். இவர் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் ஆவார்.

ஆண்டாள் பாடிய பாடல்களின் தொகுப்பு – நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஆகும்.

பெண்ணின் திருமண வயது – 18, ஆணின் திருமண வயது - 21

## 14. சாகித்ய அகாடமி விருதுபெற்ற தமிழ் சிறுகதை எழுத்தாளர்கள்

- 1970 – அன்பளிப்பு – கு.அழகிரிசாமி.
- 1979 – சக்தி வைத்தியம் - தி.ஜானகிராமன்.
- 1987 – முதலில் இரவு வரும் – ஆதவன்
- 1996 – அப்பாவின் சிநேகிதர் – அசோகமித்ரன்
- 2008 – மின்சாரப் பூ –மேலாண்மை பொன்னுசாமி
- 2010 – சூடிய பூ சூடற்க – நாஞ்சில் நாடன்
- 2016 – ஒரு சிறு இசை – வண்ணதாசன்.

சிறுகதையில் ஆரம்பம், வளர்ச்சி, முடிவு என மூன்று பகுதிகள் உள்ளன.

நாகசுரம் என்ற இசைக்கருவி 13-ம் நூற்றாண்டுக்கு பின்பு 600 ஆண்டுகளுக்கு முன்பு தான் தமிழ்நாட்டில் இசைக்கப்படுகறது.

நாகசுரம் – ஆச்சா மரக்கட்டைகளை கொண்டு செய்யப்படுகிறது. இதன்மேல் பகுதியில் சீவானி(நாணல் என்ற புல்வகை) கருவியால் செய்யப்படுகிறது.

## 15. புணர்ச்சி இலக்கணம்

புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது.

நிலைமொழி – வருமொழி.

நிலைமொழியில் – உயிரீறு(கலை+அழகு), மெய்யீறு(மண்+குடம்) எனவும், வருமொழியில் – உயிர் முதல்(வாழை+இலை), மெய் முதல்(வாழை+மரம்), என பிரிக்கலாம்.

இயல்பு புணர்ச்சியில் மாற்றங்கள் இருக்காது. (வாழை+மரம் = வாழைமரம்)

விகாரப்புணர்ச்சி – மாற்றம் ஏற்படுதல்(தோன்றல், திரிதல்,கெடுதல்)

நுழைவு+தேர்வு – நுழைவுத்தேர்வு (தோன்றல்)

பல்+பசை – பற்பசை (திரிதல்)

புறம்+நானூறு - புறநானூறு (கெடுதல்)

உயிரீற்றுப் புணர்ச்சி

மணி+அழகு = மணி+ய்+அழகு - மணியழகு

பல+உயிர் = பல+வ்+உயிர் - பலவுயிர்

சே+அடி = சே+ய்+அடி – சேயடி.

குற்றியலுகரப் புணர்ச்சி

வட்டு+ஆடினான் = வட்+(ட்+உ) + ஆடினான் – வட்டாடினான்

உறவு+அழகு = உற+(வ்+உ)+அழகு – உறவழகு

குற்றியலுகரம் – (கு,சு,டு,து,பு,று) சொல் இறுதியில் ஒருமாத்திரையிலிருந்து அரை மாத்திரையாக குறைந்து ஒலிக்கும்.

குற்றியலுகரம் ஆறுவகைப்படும். அவை,

1. வன்தொடர் குற்றியலுகரம்(நாக்கு)
2. மென்தொடர் குற்றியலுகரம்(நெஞ்சு)
3. இடைத்தொடர் குற்றியலுகரம்(மார்பு)
4. உயிர்த்தொடர் குற்றியலுகரம்(முதுகு)
5. ஆய்ததொடர் குற்றியலுகரம்(எஃகு)
6. நெடில்தொடர் குற்றியலுகரம்(காது)

வான் தந்த பாடம்(பாடல்) – பாவேந்தர் பாரதிதாசன்.

நட்புக் காலம் – கவிஞர் அறிவுமதி.

திருக்குறள் கதைகள் – கிருபானந்த வாரியார்.

கையா, உலகே ஒரு உயிர் – ஜேம்ஸ் வல்லாக்.

## ஒன்பதாம் வகுப்பு

### புதிய பாடத்திட்டம்- 3-ம் பருவம்.

### 1. பழந்தமிழர் சமூ வாழ்க்கை – திணைநிலத் தெய்வங்கள்

1. குறிஞ்சி(மலை) – முருகன்
2. முல்லை(காடு) – திருமால்
3. மருதம்(வயல்) – இந்திரன்
4. நெய்தல்(கடல்) – வருணன்
5. பாலை(பாலைவனம்) – கொற்றவை.

வெற்றியைக் கொண்டாட கொற்றவை என்ற பெண் தெய்வத்தை வணங்கினர்.

கஞ்சுகம் – மேற்சட்டை, துன்னக்காரர் – துணி தைப்பவர்.

சிறுவர் – ஐம்படைத்தாலி என்னும் கழுத்தணியை அணிந்தனர்.

முல்லை நில மக்கள் – ஏறு தழுவுதல், மற்போர், கோழி, ஆடு, யானை, சண்டைக்கோழி(கிராமங்களில்)

இசை, நாட்டியம், நாடகம்(நகரங்களில்).

பெண்கள் – கழங்காடல், அம்மாணை, பந்தாடுதல், ஓரையாடுதல் முதலிய விளையாட்டுகளை பெண்கள் விளையாடினர்.

பழந்தமிழர் நெல்சோற்றை நண்டுக்கறியோடும், காய்கறியோடும் உண்டனர்.

பண்டைத்தமிழ் இசை நூல்கள். 1. பஞ்ச மரபு, 2. முதுநாரை, 3. முதுகுருகு, 4. பெருநாரை, 5. பெருங்குருகு.

பழந்தமிழர் வாழ்வு – அகம், புறம் என இரண்டு வகைப்படும்.

மண நிகழ்வில் நெல், மலர் கலந்த நீரால் மணமக்களை நீராட்டி தூய ஆடை, அணிகலன்களை அணிவித்தனர்.

கல்வி – மரத்தடி, ஊர்மன்றம், ஆசிரியர் வீடு, வீட்டுத்திண்ணை, கல்வி கற்கும் இடம் ஆகும். பணையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டது.

உமணர் – உப்பு வணிகர்

பாணன், பாடினி – இசைக்கலைஞர்கள், ஐவகை நிலத்திற்கும் தனித்தனியே பண்வகை, யாழ், பறை போன்றவை இருந்தன.

சிற்பங்கள் – மண், மரம், தந்தத்தால் ஆனது.

கூத்துக்கலை – கூத்தர், விரலியர் – நாடகக் கலைஞர்கள். நாடக கலை சிறப்புற்று இருந்தன.

## 2. சீவக சிந்தாமணி – ஆசிரியர் திருத்தக்க தேவர்

அடிசில் – சோறு, மடிவு – சோம்பல், கொடியன்னார் – மகளிர், நற்றவம் – பெருந்தவம், வெற்றம் – எல்லை, வருக்கை – பலாப்பழம், மால்வரை – பெரியமலை.

ஐம்பெருங்காப்பியங்கள் – 1. சிலப்பதிகாரம், 2.மணிமேகலை,3.சீவகசிந்தாமணி, 4. வளையாபதி, 5. குண்டலகேசி.

ஏமாங்கத நாட்டின் செழிப்பு, தவம் புரிவோர்க்கும், இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடமாகும்.

சீவகசிந்தாமணி – 13 இலம்பகங்களைக் கொண்டது. இது மணநூல் என அழைக்கப்படுகிறது.

ஆசிரியர் – திருதக்க தேவர். காலம் ஒன்பதாம் நூற்றாண்டு.

சீவகசிந்தாமணி பாடுவதற்கு முன்னோட்டமாக நரிவிருத்தம் என்னும் நூலை இயற்றினார்.

## 3. முத்தொள்ளாயிரம் – ஆசிரியர் – தெரியவில்லை.

சேரன், சோழன், பாண்டியன் ஆகியோருடைய நாடுகளின் வளங்களை வெளிப்படுத்துகிறது.

அள்ளல்–சேறு, பழனம்–நீர்மிக்கவயல், நந்து–சங்கு, கழுகு–பாக்கு, முத்தம்-முத்து.

முத்தொள்ளாயிரம் வெண்பாவால் எழுதப்பட்ட நூல். மூன்று மன்னர்களை பற்றி 900 பாடல்களை கொண்டது. புரத்திரட்டு என்ற நூலிலிருந்து 108 செய்யுள் கிடைத்துள்ளன.

முத்தொள்ளாயிரம் – ஆசிரியர் ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.

சேரநாடு – அச்சமில்லா நாடு, சோழநாடு – ஏர்க்களம், போர்க்களம், பாண்டியநாடு – முத்துடை நாடு என முத்தொள்ளாயிரம் கூறுகிறது.

## 4. இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு.

இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு – ஆசிரியர். மா.சு.அண்ணாமலை

இரண்டாம் உலகப்போரில் 1942 பிப்ரவரி 15-ல் ஆங்கிலப் படைகள் (இந்தியப்படை) மலேசியாவில் ஜப்பானிடம் சரணடைந்தன.

இந்திய வீர்ர்களைக்கொண்டு மோகன்சிங் என்பவர் தலைமையில் ஜப்பானியர்கள் INA – இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கினர்.

தமிழகத்திலிருந்து பிழைப்புக்காக மலேசியா, பர்மா போன்ற நாடுகளுக்கு சென்றவர்கள் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்தனர்.

ஜப்பானியர், இந்திய வீர்ர்களை ஒற்றைப்படையாக ஆங்கில இராணுவத்தை அறிய நீர்மூழ்கி கப்பல்கள் மூலம் குஜராத்திற்கும், கேரளாவிற்கும் அனுப்பினர்.

இந்திய இராணுவம் அவர்களை கைது செய்து சென்னை சிறைக்கு அனுப்பியது. பலருக்கு மரண தண்டனை அளித்தது.

நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க 91 நாட்கள் நீர்மூழ்கி கப்பலில் பயணம் செய்து ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்தனர்.

1943 ஜூலை 9-ம் தேதி இந்திய தேசிய இராணுவ பொறுப்பை நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ஏற்றார்.

இந்திய தேசிய இராணுவத்திலிருந்து 45 வீர்ர்களை விமானப்படைப்பிரிவிற்கு ஜப்பானுக்கு நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் அனுப்பிவைத்தார்.(இம்பீரியல் மிலிடரி அகாடமி)

இந்திய தேசிய மகளிர் பிரிவின் தலைவராக இலட்சுமி நியமிக்கப்பட்டார். ஜானகி, இராஜாமணி போன்றோர் தமிழர்களாவர்.

1944 மார்ச் 18 இரண்டாம் உலகப்போரில் பர்மாவில் நடந்த போரில் அமெரிக்கா, இங்கிலாந்து கூட்டுப்படையால் ஒரு லட்சம் இந்தியரும், ஜப்பானியரும் வீரமரணம் எய்தினர்.

1944 மார்ச் 8 இந்திய தேசிய இராணுவம் மணிப்பூர் மொய்ராங் பகுதியில் மூவர்ண கொடியை ஏற்றியது.
1943 - 45 -ல் இந்திய தேசிய இராணுவ இளைஞர்கள் 45 பேர் சென்னை சிறையில் தூக்கிலிடப்பட்டனர்.
1944-ல் 18 வயது இராமு என்ற இளைஞன் தூக்கிலிடப்பட்டார்.

**- இந்திய தேசிய ராணுவத்தில் தமிழரின் பங்கு – பேராசிரியர் மா.சு.அண்ணாமலை**

## 5. பொருளிலக்கணம்

அகப்பொருள், புறப்பொருள் என பொருளிலக்கணம் இரண்டு வகைப்படும்.

அகப்பொருள் – தலைவன், தலைவி அன்பு.

புறப்பொருள் – அறம், பொருள், வீடு, கல்வி, கொடை, புகழ்.

தொல்காப்பியர் – அகத்திணை ஏழு என்பர். அவை, அன்பின் ஐந்திணை(குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலை)+கைக்கிளை, பெருந்திணை.

| திணை | தலைவன் தலைவி |
|---|---|
| குறிஞ்சி | – உள்ளத்தால் இணைவது |
| முல்லை | – தலைவன் வருகைக்கு காத்திருத்தல் |
| மருதம் | – ஊடல் |
| நெய்தல் | – தலைவன் வராத்தால் தலைவி வருந்துதல் |
| பாலை | – தலைவன் தலைவியை விட்டுப்பிரிதல். |
| கைக்கிளை | – ஒருதலை காமம் |
| பெருந்திணை | – பொருந்தா காமம் |

புறத்திணையை ஏழு வகையாக தொல்காப்பியர் கூறுகிறார். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்.

| திணை | நிகழ்வு |
|---|---|
| வெட்சி | – பசுக்கூட்டங்களை கவர்தல், மீட்டல் |
| வஞ்சி | – எதிர் நின்று போரிடுதல் |
| உழிஞை | – கோட்டையை முற்றுகையிடல் |
| தும்பை | – வலிமையை நம்பி போரிடுதல் |
| வாகை | – மேம்பாட்டுடன் இருத்தல், வெற்றிபெறுதல். |
| காஞ்சி | – நிலையாமையை உணர்த்துவது. |

**<u>நன்னெறி</u>**

பாடாண் – கல்வி, புகழ், ஈகையை பாடுவது.

தந்தை பெரியாரின் மனைவி – நாகம்மையார், தங்கை – கண்ணம்மா இணைந்து மதுவிலக்கு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழர் உணவு – பக்தவச்சல பாரதி

ஆகாயத்துக்கு அடுத்த வீடு – மு.மேத்தா

தமிழ் பழமொழிகள் – கி.வா.ஜெகநாதன்

**என் தலைக் கடனே – பெரியாரின் சிந்தனைகள்**

**பெரியாரின் வேறு பெயர்கள்** – வெண்தாடி வேந்தர், பகுத்தறிவு பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம், தெற்காசியாவின் சாக்ரடீஸ், புத்துலகத்தொலைநோக்காளர், பெண்ணினப்போர் முரசு, சுயமரியாதைச்சுடர்.

**பெரியார் எதிர்த்தவை** – இந்தி திணிப்பு, குலக்கல்வித்திட்டம், தேவதாசி முறை, கள்ளுண்ணல், குழந்தை திருமணம், மணக்கொடை.

ஐ – அய், ஔ – அவ் என பெரியார் சீர்சிருத்தம் செய்தார்(அய்யா, அவ்வை) இதனை தமிழக அரசு 1978-ல் நடைமுறைப்படுத்தியது.

விழாக்களும், சடங்குகளும் – மூடப்பழக்கம் வீண் செலவு ஏற்படுகறது –பெரியார்.

பெரியார் விதைத்த விதைகள் – கல்வி வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு, பெண்களுக்கு இடஒதுக்கீடு, பெண்களுக்கு சொத்துரிமை, குடும்ப நலத்திட்டம், கலப்பு திருமணம், சீர்திருத்த திருமண ஏற்பு.

1938 நவம்பர் 13-ல் சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வே.ராவுக்கு – பெரியார் என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

27.06.1970-ல் **UNESO –** பெரியாருக்கு தெற்காசியாவின் சாக்ரடீஸ் பட்டம் வழங்கியது.

பெரியார் 1925-ல் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தார்.

குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட்(ஆங்கில இதழ்) – பெரியார் நடத்திய இதழ்கள்.

## 7. ஒளியின் அழைப்பு – ஆசிரியர் – நா.பிச்சைமூர்த்தி.

புதுக்கவிதையின் தந்தை – நா.பிச்சமூர்த்தி

தாவே தே ஜிங் – ஆசிரியர் – லாவோட்சு

வெற்றிடம் இல்லாத குடத்தில் நீரை நிரப்ப முடியாது.

லாவோட்சு கி.மு. இரண்டாம் நூற்றாண்டு. சீனா நாட்டை சார்ந்தவர்.

கன்பூசியஸ் சமகாலத்தவர். தாவோவியம்-வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என கூறினார்.

கன்பூசியஸ் – ஒழுக்கத்தை மையமாக வைத்து போதித்தார்.

## 8. யசோதர காவியம்

வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

சமண முனிவரால் எழுதப்பட்டது

யசோதரன் என்ற அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றை கூறுகிறது.
இந்நூல் ஐந்து சருக்கங்கள், 330 பாடல்களையுடையது.

## 9. மகனுக்கு எழுசிய கடிதம் – ஆசிரியர் – நா.முத்துக்குமார்.

## 10. யாப்பிலக்கணம்

கவிதை இயற்றும் முறைகளை கூறும் இலக்கணம் – யாப்பிலக்கணம்.
யாப்பு ஆறு வகைப்படும். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை.
எழுத்து – குறில்,நெடில்,ஒற்று என மூன்று வகைப்படும்.
அசை – எழுத்துக்களால் ஆனது, நேரசை, நிரையசை என இருவகைப்படும்.
சீர் – ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளின் சேர்க்கை சீர் ஆகும்
ஈரசை சீர்களுக்கு – இயற்சீர், ஆசிரிய உரிச்சீர் என்னும் வேறு பெயர்களும் உண்டு.
அடி – ஐந்து வகைப்படும் – குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி.
தொடை – செய்யுள் உறுப்பு, தொடை எட்டு வகைப்படும்
மோனை – அடிகளில், சீர்களில் முதலெழுத்து ஒன்றி வருவது.
எதுகை – அடிகளில், சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது.
இயைபுத்தொடை – இறுதி எழுத்து ஒன்றியமைவது.
பெரியாரின் சிந்தனைகள் – வே.ஆனைமுத்து.
அஞ்சல் தலைகளின் கதை – எஸ்.பி.சட்டர்ஜி
தங்கைக்கு – மு.வரதராசன், தம்பிக்கு – அறிஞர் அண்ணா.

## 11. அன்பெனும் அறனே.

விரிவாகும் ஆளுமை – பேராசிரியர் தனிநாயகம்.
60. இலங்கை யாழ் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரை.
61. யாதும் ஊரே யாவரும் கேளிர்(உறவினர்) – கனியன் பூங்குன்றனார்.
62. நான் மனிதன், மனிதனைச்சார்ந்த எதுவும் எனக்கு புறமன்று – இலத்தின் புலவர் தென்றல்.
63. முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் தேவை – கோர்டன் ஆல்போர்ட்.
1. ஈடுபாடு, 2. அறிந்துகொள்ளுதல், 3. வாழ்க்கை தத்துவம்.
64. குறிக்கோள் இல்லாத சமுதாயம் வீழ்ச்சியடையும்.
65. லாவோட்ஸ் – சீனா பிறப்பு கி.மு. 604.
66. கன்பூசியஸ் – கி.மு. 551-479.

67. ஆல்பர்ட் சுவைட்சர் – உலக மேதை, திருக்குறளை போல வேறு நூல் இல்லை என்கிறார்.

68. தொல்காப்பியர் நிலத்தை ஐந்திணையாக பிரித்தார்.

69. நன்மையை நன்மைக்காகச் செய்தவர் – ஆயி(கடையேழு வள்ளல்களில் ஒருவர்)

70. பிறர்க்காக வாழ்வதே உயர்ந்த பண்பும், பண்பாடும் ஆகும்.

## 12. உலகத்தமிழ் மாநாடு

1. – 1966 கோலாலம்பூர் – மலேசியா.

2. – 1968 சென்னை - இந்தியா.

3. – 1970 பாரீசு - பிரான்சு.

4. – 1974 யாழ்ப்பாணம் - இலங்கை.

5. – 1981 மதுரை - இந்தியா.

6. – 1987 கோலாலம்பூர் – மலேசியா.

7. – 1989 மொரீசியசு – மொரீசியசு.

8. – 1995 தஞ்சாவூர் – இந்தியா.

9. – 2010 கோயம்புத்தூர் – இந்தியா. (செம்மொழி மாநாடு)

72. ஜி.யு.போப் திருவள்ளுவரை உலகப் புலவர் என்று போற்றுகிறார்.

73. தனிநாயகம் – அகில உலகத் தமிழாய்வு மன்றம் உருவாகவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உருவாகவும் இவர் காரணமாக இருந்தார்.

74. தமிழ்ப் பண்பாடு – தனிநாயகம்.

## 13.குறுந்தொகை – 401(பாடல்கள்)

75. அக இலக்கிய நூல் – இயற்கை வளத்தை வர்ணிப்பது, தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரைத் துடைத்து, தோழி ஆறுதல் கூறுவது.

76. நசை – விருப்பம், நங்கல் – வழங்குதல், பிடி – பெண் யானை, வேழம் – ஆண்யானை, யா – ஒருவகை மரம், (பாலை நிலத்தில் வளர்வது). பொளிக்கும் – உரிக்கும், ஆறு – வழி.

77. குறுந்தொகை ஆசிரியர் – பாலை பாடிய பெருங்கடுங்கோ. சேர மரபை சேர்ந்த மன்னர்.

78. குறுந்தொகை நூலை 1915-ல் முதலில் கௌரிப்பெருமாள் அரங்கனார் பதிப்பித்தார்.

## 14. தாய்மைக்கு வறட்சி இல்லை.

79. வளதம்மா – சு. சமுத்திரம். ஆசையோடு ஊட்டியது, அடுக்கடுக்கான அறிவுரைகளை சொன்னது.

**வறுமை**

வயிற்றில் பசிமுள் குத்தி வலியெடுத்தது
அவர்களைப்பார்த்து தனக்குள் எற்பட்ட பசிப்பார்வை
பஞ்சம் பிழைக்க நாடோடியாய் போயிடு
அவள் வயிற்றுக்கும் சூடுபிடித்தது
பட்டினியால் பழக்கப்பட்ட மரத்துப்போன அவள் வயிறு
இப்பொழுது வாயை வம்புக்கிழுத்தது.

**சு. சமுத்திரம்**

80. திருநெல்வேலி மாவட்டம், திருப்பணம் பட்டியைச் சேர்ந்தவர்.

- 300 க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.
- வாடாமல்லி, பாலைப்புறா, மண்சுமை, தலைப்பாகை, காகித உறவு – புகழ்பெற்ற சிறுகதைகள்.
- வேரில் பழுத்த பலா – புதினத்திற்கு சாகித்திய அகாடமி விருதும், குற்றம் பார்க்கில் – சிறுகதைக்கு தமிழக அரசின் பரிசையும் பெற்றார்.

## 15. அணியிலக்கணம்

81. செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது – அணி எனப்படும்.

82. உவமையணி – எ.கா. - மலர்பாதம் – மலர்போன்ற பாதம்.

83. உருவக அணி – உவமை, உவமேயம் ஒன்றுசேர வருவது உருவக அணி எனப்படும். எ.கா. – இன்சொல் வறை நிலமோ.

84. பின்வரு நிலையணி – ஒரு சொல்லோ, பொருளோ, மீண்டும் பல இடத்தில் வருவது.

85. சொல் பின்வருநிலையணி – முன் வந்த சொல் பின்னும் வந்து வேறு பொருளை உணர்த்துவது.

86. பொருள் பின்வரு நிலையணி – செய்யுளில் முன்வந்த பொருளே பின்னர், பல இடங்களில் வருதல்.

87. சொற்பொருள் பின்வருநிலையணி – முன்னர் வந்த சொல் பின்னர் வருதல்.

88. வஞ்சப்புகழ்ச்சி அணி – புகழ்வது போல பழிப்பது, பழிப்பது போல புகழ்வது.

89. சிற்பியின் மகள் – பூவண்ணன்.

- அப்பா சிறுவனாக இருந்த போது – அலெக்ஸாண்டர் ரஸ்கின்.



# மான்சி

## போட்டித் தேர்வு

### கொள்குறி வகை வினாவிடைப் புத்தகம்

வரலாறு, புவியியல், குடிமையியல், பொருளியல், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், தமிழ் செய்யுள், உரைநடை, இலக்கணம், கணிதம் ஆங்கிலம் ஆகிய பாடங்களை உள்ளடக்கியது.

| | | |
|---|---|---|
| TNPSC | - | Tamilnadu Public Service Commission<br>தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் |
| TET | - | Teacher Eligibility Test<br>ஆசிரியர் தகுதித் தேர்வு |
| TRB | - | Teacher Recuirtment Board<br>ஆசிரியர் தேர்வு வாரியம் |
| IAS | - | Indian Administrative Service<br>இந்திய ஆட்சிப்பணி |
| NEET | - | National Eligibility Entrance Test<br>தேசிய நுழைவு தகுதி தேர்வு |
| SSC | - | Staff Selection Commission<br>மத்திய பணியாளர் தேர்வு ஆணையம் |
| SLET | - | State Level Eligibility Test<br>தமிழ்நாடு மாநில தகுதி தேர்வு (கல்லூரி பேராசிரியர்) |
| NET | - | National Eligibility Test<br>தேசிய தகுதி தேர்வு (கல்லூரி பேராசிரியர்) |
| NMMS | - | National Means Cum Merit Scholarship<br>தேசிய வருவாய் திறன் தேர்வு |
| NTSE | - | National Talent Search and Merit Scholarship-தேசிய திறனாய்வு தேர்வு |
| RRB | - | Railway Recuirtment Board<br>இரயில்வே தேர்வு வாரியம் |
| DEFENCE | - | பாதுகாப்புப் படை |
| UNIFORMED SERVICES | - | சீருடைய பணியாளர் தேர்வு வாரியம் |